செ.வெ.எண்:22/2017 நாள்:12.07.2017

**சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், நெடுமறம் கிராமத்தில்**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் மக்கள் தொடர்பு முகாம் நடைபெற்றது.**




சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், நெடுமறம் கிராமத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் வருவாய்த்துறை மூலம் 73 பயனாளிகளுக்கு பட்டா மாறுதல், வீட்டுமனைப் பட்டா ஆணைகளையும், ஆண் வாரிசு சான்று, சிறு விவசாயச் சான்று, விதவைச் சான்று, வாரிசுச் சான்று ஆகியவற்றையும், உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 1 பயனாளிக்கு திருமண உதவித் தொகையாக ரூ.10,000/-க்கான காசோலையும், 5 நபர்களுக்கு இறப்பு நிவாரண உதவித் தொகையாக ரூ.60,000/- மதிப்பில் காசோலையும், 4 நபர்களுக்கு மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித் தொகைக்கான ஆணையும், 6 நபர்களுக்கு விதவை உதவித் தொகைக்கான ஆணையும், வேளாண்மைத்துறை சார்பில் 3 பயனாளிகளுக்கு தென்னங்கன்றுகளையும், 1 பயனாளிக்கு 50% மானிய விலையில் 20 கிலோ உளுந்து விதையினையும், தோட்டக்கலைத்துறை மூலம் மானிய விலையில் 3 நபர்களுக்கு மா மரக்கன்றுகளையும், 1 நபருக்கு பசுமைக் குடில் அமைக்க மானியத்துடன் கூடிய ஆணையும், 2 நபர்களுக்கு சிப்பம் கட்டும் அறை கட்டுவதற்கான மானியத்துடன் கூடிய ஆணையும் ஆக மொத்தம் 99 பயனாளிகளுக்கு நலத்திட்டங்கள் வழங்கிப் பேசியதாவது,

எந்த ஒரு நிகழ்ச்சிக்கும் ஒரு நோக்கம் இருக்கும். 15 நாட்களுக்கு முன்னர் 74 மனுக்கள் பெறப்பட்டு 73 மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளது. அரசு அலுவலர்கள் விளக்க உரையில் திட்டங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்கள். பொதுமக்களாகிய நீங்கள் திட்டங்கள் குறித்து தெரிந்து கொண்டு உங்களுடைய உரிமைகளை உரியகாலத்தில் பெறுமாறு கேட்டுக் கொண்டார். மேலும், அரசு

நலத்திட்டங்கள் பெற தங்களுக்கு அருகாமையில் உள்ள இ.சேவை மையங்களில் விண்ணப்பம் கொடுத்து அதற்கான ஒப்புதல் சீட்டு பெறுமாறும், வளர்இளம் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள் சத்தான உணவுகளை சாப்பிட்டு ஆரோக்கியமான குழந்தையைப் பெறுவது பெண்களின் கடமை எனவும், பொதுமக்கள் பொது இடங்களில் மலம் கழிப்பது தவிர்த்து தனிநபர் கழிப்பறை கட்டுவதற்கு அரசு வழங்கும் ரூ.12,000/-த்தை பெற்று கழிப்பறை கட்ட வேண்டும் எனவும், கழிவறை என்பது அவசியமான ஒன்று என்றும், தொற்றுநோய் வராமல் இருக்க வேண்டும் எனில், அனைவரும் தனிநபர் கழிப்பறை கட்ட வேண்டும். இது மனம் சார்ந்த விசயம் பொருள் சார்ந்த விசயம் இல்லை என்றார்.

டெங்கு பரவாமல் இருக்க பெண்கள் விழிப்புணர்வு உடையவர்களாக இருந்தால் டெங்கு வருவதை தவிர்க்கலாம். பெண்கள் தெளிவான சிந்தனையை பெற்றவர்கள். ஆதலால், பெண்களுக்கு தருகின்ற ஒவ்வொரு செய்தியும் அந்தந்த குடும்பத்திற்கு தெளிவாக சென்றடையும் எனவும், அனைவரும் அரசு நலத்திட்டங்கள் பெற்று பயனடையுமாறும் சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்தார்.

இம்முகாமில், தேவகோட்டை வருவாய் கோட்டாட்சியர் (பொறுப்பு) திரு.நாராயணன், திருப்பத்தூர் வட்டாட்சியர் திருமதி.குமரி, தனி வட்டாட்சியர் திருமதி.கார்த்தியாயினி, மண்டல துணை வட்டாட்சியர் திரு.நேரு உட்பட அனைத்து அரசுத்துறை அலுவலர்கள், வருவாய்த்துறை பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

::வெளியீடு::

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,

சிவகங்கை.